திருவள்ளூர் மத்திய மாவட்ட இளைஞர் அணி சார்பில் நீட் தேர்விணை ரத்து செய்திட ஒன்றிய அரசினை வலியுறுத்தி ஆவடி அடுத்த பருதிப்பட்டு மகாலட்சுமி மகளிர் கல்லூரில் அருகில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நடுகுத்தகை கே.சுரேஷ்குமார் ஏற்பாட்டில் பகுதிச் செயலாளர் ஜி.ராஜேந்திரன் முன்னிலையில் முன்னாள் அமைச்சரும் மாவட்டக் கழகச் செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ தலைமையில் கல்லூரி மாணவிகள் இணையதளம் வழியாக நீட் தேர்வை எதிர்த்து கையெழுத்து பெறப்பட்டது அருகில் மேயர் ஜி.உதயகுமார், நிர்வாகிகள் மாநில மாணவர் அணி துணை செயலாளர் ஜெ.ஜெரால்டு, மாநகர ஒன்றிய நகர கழக செயலாளர்கள் சன் பிரகாஷ், பேபிசேகர், ஜி.நாராயணபிரசாத், பொன்விஜயன், என்.இ.கே.மூர்த்தி, சே.பிரேம்ஆனந்த், மாநகர இளைஞரணி அமைப்பாளர் ஜி.துர்காபிரசாந்த் ஜி.சி.சி.கருணாநிதி, வி.ஜெ.உமாமகேவரன், டி. பிரியாகுமார் , வி.தியாகராஜன், டாக்டர் க.ராஜேஷ் குமார், வட்டச் செயலாளர் கவுன்சிலர் அழகுவிஜயாவின்சென்ட், வி.சிங்காரம், சதீஷ், மகேஷ்ரெங்கநாதன், ஆர்.பிரவீன்குமார், ஏ.கே.எம். சரத்குமார், புருஷோத்தமன், க.பாபு, சக்திபிரியதர்சினி, மோதிஸ்ஜீத்து, கவியரசு, பிரசன்னா, உள்பட பலர் உள்ளனர்.

கிரிக்கெட் உலகக் கோப்பை 2023

அரையிறுதிக்கு தகுதி பெற்றது இந்திய அணி!

மும்பை,நவ.3-

இலங்கைக்கு எதிரான போட்டியில் இந்திய அணி 302 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

உலகக் கோப்பையில் மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்ற நேற்றைய போட்டியில் இந்தியா இலங்கை அணிகள் விளையாடின. இந்தப் போட்டியில் முதலில் பேட் செய்த இந்திய அணி 8 விக்கெட்டுகளை இழந்து 357 ரன்கள் குவித்தது. இந்திய அணியில் அதிகபட்சமாக ஷுப்மன் கில் 92 ரன்கள் எடுத்தார். அவரைத் தொடர்ந்து விராட் கோலி 88 ரன்களும், ஸ்ரேயாஸ் ஐயர் 82 ரன்களும் எடுத்தனர். இலங்கை தரப்பில் சிறப்பாக பந்து வீசிய தில்ஷன் மதுஷங்கா 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றி அசத்தினார்.

இதையடுத்து களம் இறங்கிய இலங்கை அணி 19.4 ஓவர்களில் 55 ரன்களுக்கு சுருண்டது. இதன்மூலம் 302 ரன்கள் வித்தியாசத்தில் இந்திய அணி அபார வெற்றி பெற்றது. உலகக் கோப்பையில் முதல் அணியாக இந்திய அணி அரையிறுதிக்கும் தகுதி பெற்றது.

நகர் ஊரமைப்பு இயக்ககம், கோயம்பேடு வளாகத்தில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறைஅமைச்சர் சு.முத்துசாமி தலைமையில் நேற்று (02.11.2023) ஒற்றை சாளர முறை (Single Window Portal) நடைமுறைப்படுத்துவதன் முன்னேற்றம், மலையிட பாதுகாப்புக் குழுமம் (HACA) சம்பந்தமான வழிமுறைகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அரசு செயலாளர் சி.சமயமூர்த்தி, நகர் ஊரமைப்பு இயக்குநர் பா.கணேசன், மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை தீவுத்திடலில் - ஃபார்முலா ரேசிங் சர்க்யூட்டின்

இந்திய பந்தய விழா நடத்திட ரூ.15 கோடி நிதி!

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திடம் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, நவ.3- முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நேற்று (2.11.2023) சென்னை தலைமைச் செயலகத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் (ம) சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு ஆகியோர் தலைமையில் சென்னை தீவுத்திடல் மைதானத்தில் ஃபார்முலா ரேசிங் சர்க்யூட்டின் இந்திய பந்தய விழாவை நடத்துவதற்காக சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் திட்ட நிதியிலிருந்து ரூ.15 கோடி நிதியை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திடம் வழங்கினர்.

சென்னை ஃபார்முலா ரேசிங் சர்க்யூட்டின் இந்திய விழாவினை நடத்துவதற்கான உரிமம் மற்றும் இயக்கக் கட்டணத்தை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திடம் ரூ.15 கோடி நிதி உதவி கோரியது. அதன் அடிப்படையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு அவர்களும் இப்ஃபார்முலா பந்தயம் சென்னை தீவுத்திடல் மைதானத்தில் ஃபார்முலா ரேசிங் சர்க்யூட்டின் இந்திய பந்தய விழாவை நடத்துவதற்காக சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் திட்ட நிதியிலிருந்து ரூ.15 கோடி நிதியை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திடம் வழங்கினர்.

வருகின்ற 2023 டிசம்பர் 8 மற்றும் 9 ஆகிய தேதிகளில் சென்னையில் நடைபெறவுள்ள சென்னை ஃபார்முலா ரேசிங் பந்தயமானது சென்னை தீவுத்திடல் மைதானத்தில் தொடங்கி, கொடி பணியாளர் சாலை, பல்லவன் சாலை, சிவானந்தா சாலை, நேப்பியர் பாலம் மற்றும் தீவுத்திடல் மைதானம் வரையிலான தூரம் 3.7 கி.மீ. ஆகும். இது இந்தியாவின் முதல் சாலை இரவு ஃபார்முலா பந்தயம் ஆகும்.

இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை செயலாளர் சி.சமயமூர்த்தி, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

கொளத்தூர் சட்டமன்றத் தொகுதி வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்து

அரசுத் துறைகளின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நடைபெற்றது!

சென்னை, நவ.3- கொளத்தூர் சட்டமன்றத் தொகுதி வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்து அரசு துறைகளின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நடைபெற்றது.

இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் தலைமையில் நேற்று (02.11.2023) திரு.வி.க.நகர் மண்டல அலுவலகத்தில் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்த அரசுத் துறைகளின் ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் பெருநகர சென்னை மாநகராட்சி, நீர்வளத்துறை, பொதுப்பணித்துறை, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம், சென்னைப் பெருநகர குடிநீர் வாரியம், தமிழ்நாடு மின்சார வாரியம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் உள்ளிட்ட துறைகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து ஆய்வு செய்து நடைபெற்றுவரும் பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் அமைச்சர் அவர்கள் நீர்வளத்துறையின் சார்பில் தணிகாச்சலம் கால்வாயில் மேற்கொள்ளப்பட்டு வரும் அகலப்படுத்தும் பணி மற்றும் கொளத்தூர் ஏரியில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆழப்படுத்தும் பணி குறித்தும் கேட்டறிந்து ஆய்வு செய்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஜவஹர் நகரில் திறந்து வைக்கப்பட்ட கண் மருத்துவமனையின் செயல்பாடுகள் குறித்தும், தமிழ்நாடு மின்வாரியத்தின் சார்பில் கணேஷ் நகரில் கட்டப்பட்டு வரும் துணை மின் நிலையத்தின் கட்டுமானப் பணிகளின் நிலை குறித்தும் கேட்டறிந்து ஆய்வு செய்தார். சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலை வெட்டுப் பணிகளை வடகிழக்குப் பருவமழைக்கு முன்னதாக முடித்திடவும் அறிவுறுத்தினார்.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் ஜமாலியா Tenementsல் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை விரைந்து முடித்திடவும், ராஜா கார்டன் பகுதிகளில் கட்டடம் கட்டுவதற்கான பணிகளின் நிலை குறித்து கேட்டறிந்து, பிற சேவைத் துறைகள் இந்தப் பணிகளில் ஒருங்கிணைந்து செயல்படவும் அறிவுறுத்தினார்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் பல்லவன் சாலை, கொளத்தூர் பிரதான சாலையில் மழைநீர் வடிகால் பணிகளின் காரணமாக மேற்கொள்ளப்பட்ட சாலை சீரமைப்புப் பணிகள் முடிவுற்றுள்ளது. மேலும், கார்த்திகேயன் சாலை, வெங்கட்ராமன் சாலை, ஜெகநாதன் சாலைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலை சீரமைப்புப் பணிகளை விரைந்து முடித்திடவும் அறிவுறுத்தினார். ஜி.கே.எம். காலனியில் அமையவிருக்கும் சமுதாய நலக் கூட பணிக்கான அமைப்பு மற்றும் முகப்பு வடிவமைப்புகள் குறித்தும் கேட்டறிந்து, பணிகளை விரைவில் தொடங்கி முடித்திடவும் அறிவுறுத்தினார்.

ஜகநாதன் தெருவில் கட்டப்பட்டு வரும் பல் நோக்கு மைய கட்டடப் பணியினை விரைந்து மேற்கொள்ளவும், கொளத்தூர் பகுதியில் உள்ள மார்க்கெட் தெரு, ஜி.கே.எம். காலனி 27வது தெரு மற்றும் 12வது தெரு மற்றும் பள்ளி சாலையில் உள்ள சென்னைப் பள்ளிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பள்ளிக் கட்டடத்திற்கான கட்டுமானப் பணிகள் குறித்து கேட்டறிந்து பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், மேயர் திருமதி ஆர்.பிரியா, மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜே.பிரவீன் குமார், மண்டல கண்காணிப்பு அலுவலர் கணேஷ், மண்டலக் குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் தொடர்புடைய துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ முன்னிலையில்

39(அ) வட்ட கழக பாக முகவர்கள்(BLA.2) கூட்டம் !

தா.வ.மு.கஜேந்திரன் அறிக்கை!

சென்னை நவ: 3

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி 39(அ) வட்ட கழக பாக முகவர்கள் (BLA2) ஆலோசனைக் கூட்டம் இன்று (03.11.2023 வெள்ளிக்கிழமை) மாலை 5.00 மணியளவில் பி.எஸ்.எஸ். தனுஷ்கோடி இல்லத்தில் 269/63 திருவொற்றியூர் நெடுஞ்சாலை புது வண்ணையில் நடைபெறுகிறது.

இக்கூட்டம் வட்டச் செயலாளர் தா.வ.மு.கஜேந்திரன் தலைமையில் ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர் முன்னிலையில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் பகுதிச் செயலாளர் இரா.லட்சுமணன் பங்கேற்கிறார்.மற்றும் வட்ட கழக நிர்வாகிகள், பாக பொறுப்பாளர்கள், பாக முகவர்கள் மற்றும் மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள்,கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு வட்டச் செயலாளர் தா.வ.மு.கஜேந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

பொருள் : 04.11.2023 அன்று நடைபெறும் வாக்காளர் சரிபார்த்தல் முகாம், 05.11.2023 அன்று திருவள்ளூரில் (BLA2) வாக்கு சாவடி பொறுப்பாளர்கள் பயிற்சி பாசறை கூட்டம் மற்றும் கழக ஆக்கப் பணிகள்.

கரூர் மாவட்டம்

கரூர் மத்திய பகுதி - கரூர் மத்திய மேற்கு பகுதி மற்றும் அரவக்குறிச்சி பேரூர்க் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்!

தலைமைக் கழக அறிவிப்பு

கழக சட்டதிட்ட விதிகளின்படி, 'ஒருவருக்கு ஒரு பொறுப்பு' என்ற அடிப்படையில்:

கரூர் மாவட்டம், கரூர் மாநகரம், கரூர் மத்திய பகுதிச் செயலாளர் எஸ்.பி.கனகராஜ் அவர்களை, கரூர் மத்திய பகுதிச் செயலாளர் பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக, திரு.**வி.ஜி.எஸ்.குமார்** *(47, பாரதிதாசன் தெரு, கோவை ரோடு, கரூர், கரூர் மாவட்டம்)* அவர்கள் கரூர் மத்திய பகுதிக் கழகப் பொறுப்பாளராகவும்:

அரவக்குறிச்சி கிழக்கு ஒன்றியம், அரவக்குறிச்சி பேரூர்க் கழகச் செயலாளர் என்.மணிகண்டன் அவர்களை, அரவக்குறிச்சி பேரூர்க் கழகச் செயலாளர் பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக திரு. **பி.பாலசுப்பிரமணி (எ) பி.எஸ்.மணி** (11/1, பொன் நகர், அரவக்குறிச்சி & அஞ்சல், கரூர் மாவட்டம்) அவர்கள் அரவக்குறிச்சி பேரூர்க் கழகப் பொறுப்பாளராகவும் நியமிக்கப்படுவதுடன்,

கரூர் மத்திய மேற்கு பகுதிச் செயலாளர் கா.அன்பரசன் அவர்களை, அவர் வகித்து வந்த பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக திரு. **ஆர்.ஜோதிபாசு** *(4, திருநகர் 3வது கிராஸ், காமராஜபுரம் வடக்கு, செங்குந்தபுரம் அஞ்சல், கரூர் வட்டம் & மாவட்டம்)* அவர்கள் கரூர் மத்திய மேற்கு பகுதிக் கழகப் பொறுப்பாளராகவும் நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தந்த பகுதி மற்றும் பேரூர்க் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள், இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 02.11.2023

துரைமுருகன்,
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சென்னை வடகிழக்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை சார்பில் பள்ளி மாணவ மாணவிகளுக்கு ஒப்புவித்தல் போட்டி நடைபெற்றது. நிகழ்ச்சியில் சென்னை வடகிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாநில செயலாளர் இறையன்பன் குத்தூஸ், துணை செயலாளர் கவிஞர் நன்மாறன், மிசா. பா.மதிவாணன், டி.ராமகிருஷ்ணன், ஜி.துக்காராம், என்.நாராயணன், ஆர்.டி.மதன்குமார், முல்லை.ஆறுமுகம், கு.தமிழ்மணி,பி.எஸ்.சைலஸ் உள்ளிட்ட ஏராளமான கழக நிர்வாகிகளும் கழகத் தோழர்களும் கலந்து கொண்டனர் முதல் மூன்று இடம் பிடித்த மாணவர்களுக்கு ரொக்க பரிசுகள் வழங்கப்பட்டது.

ச.சண்முகநாதன் தலைமை! இறையன்பன் குத்தூஸ் - கவிஞர் நன்மாறன் - எஸ்.மோகன் பங்கேற்பு!

சென்னை தென்மேற்கு கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை - கவிதை ஒப்பித்தல் போட்டி!

வெற்றி பெற்றவர்களுக்கு மயிலை த.வேலு எம்.எல்.ஏ. - ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. பரிசுகள் வழங்கினர்!

சென்னை, நவ.3- சென்னை தென்மேற்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா - கவிதைகள்- திரைப்பட வசனங்கள் ஒப்பித்தல் போட்டியில் வெற்றியாளர்களுக்கு பரிசுத் தொகையை மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வழங்கினார்.

தியாகராயநகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி மாணவ-மாணவியருக்கு ஊக்கப்பரிசு வழங்கினார்.

மாவட்ட அமைப்பாளர் ச.சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மாநிலச் செயலாளர் இறையன்பன் குத்தூஸ், துணைச் செயலாளர் கவிஞர் நன்மாறன், மாணவர் அணி இணைச் செயலாளர் எஸ்.மோகன், பகுதிக் கழகச் செயலாளர்கள் கே.ஏழுமலை எம்.சி., நந்தனம் கி.மதி எம்.சி., மயிலை எஸ்.முரளி, தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.சு.மணி, வட்டச் செயலாளர்கள் பி.மாரி, எஸ்.ஆர்.ராஜா, சுரேஷ்குமார், பி.ஜெயக்குமார், ந.மோ.முரளி, எஸ்.லட்சுமிகாந்தன், அ.தவநேசன், அ.நாகராசன், லலிதாபுரம் என்.துரை, ஜி.பி.செந்தில்குமரன், பேரவையின் மாவட்டத் துணைத் தலைவர் நந்தனம் ஆர்.கே.சிவகுமார், துணை அமைப்பாளர்கள் கோயில் தி.ரமேஷ், துணை ஆனந்த்ராஜ், ஜி.எம்.செல்வராஜ், ஆ.தேவேந்திரன் ஆகியோர் வரவேற்றனர்.

இதில் மாவட்டக் கழக நிர்வாகிகள் மாம்பலம் ஆ.சந்திரசேகர், மு.சத்யா, கே.மலர், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் வெங்கடேசன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

துணை அமைப்பாளர் கோ.மோகன்ராஜ் நன்றி கூறினார்.

முதல் பரிசு ரூ.10,000/- அஞ்சுகம் மேனிலைப் பள்ளி 9-ஆம் வகுப்பு மாணவர் ஞா.சந்தோஷ்க்கும், இரண்டாம் பரிசு ரூ.5000/- ம் சாரதா வித்யாலயா பள்ளி-பர்கிட் சாலை, 11-ஆம் வகுப்பு மாணவி சி.கண்மணிக்கும், மூன்றாம் பரிசு ரூ.3000/- சாரதா வித்யாலயா பள்ளி பர்கிட் சாலை 12-ஆம் வகுப்பு மாணவி பி.பூங்குழலிக்கும் வழங்கப்பட்டது.

ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

தலைமைக் கழக அறிவிப்பு

விழுப்புரம் வடக்கு மாவட்டம், மரக்காணம் ஒன்றியம், நல்லூரைச் சேர்ந்த எஸ்.கண்ணன் அவர்கள், தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 02.11.2023

துரைமுருகன்,
பொதுச் செயலாளர்
தி.மு.க.

தாம்பரம் மாநகரம் தாம்பரம் மேற்கு பகுதி கழகத்தின் சார்பில் வாக்குசாவடி நிலை முகவர்கள் (BLA2) கூட்டம் பகுதிச் கழக செயலாளர் மண்டல குழு தலைவர் எஸ்.இந்திரன் ஏற்பாட்டில் கிழக்கு தாம்பரம் பாரத மாதா தெருவில் அமைந்துள்ள தனியார் திருமண மண்டபத்தில் தாம்பரம் மேற்கு பகுதி கழக அவை தலைவர் வி.முனுசாமி தலைமையில் நடைபெற்றது. இதில் மாநகரச் செயலாளர் எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ. ஆலோசனை வழங்கினார். உடன் எம்.சீனிவாசகுமார், கி .வேல்மணி எல்.பேகம், பி.ஜோதிகுமார், மாமன்ற உறுப்பினர்கள் ரமணிஆதிமூலம், சசிகலாகார்த்தி, கொடி தாமோதரன், சி சுரேஷ் மற்றும் பகுதி நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், நிர்வாகிகள், பகுதிக்கு உட்பட்ட மாநகர அணிகளின், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி ,கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்

பெரம்பூர் பகுதி 53வது வட்ட

முன்னாள் அவைத்தலைவர் இரா.ஏழுமலை மறைவு!

தா.இளைய அருணா - முன்னணியினர் அஞ்சலி!

சென்னை, நவ.3- பெரம்பூர் பகுதி 53-வது வட்டக் கழக முன்னாள் அவைத்தலைவரும், கழக மூத்த முன்னோடியுமான இரா. ஏழுமலை (88) நேற்று மாலை வயது மூப்பின் காரணமாக இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவலறிந்து மாவட்டச் செயலாளர் தா.இளைய அருணா, வட்டச் செயலாளர் பால லட்சுமணன், முன்னாள் வட்டச் செயலாளர் எஸ்.எம். சாமி, மாநகராட்சி மன்ற காங்கிரஸ் தலைவர் எம். எஸ்.திரவியம், பகுதி வட்டக் கழக நிர்வாகிகள் மறைந்த இரா. ஏழுமலை உடலுக்கு நேரில் அஞ்சலி செலுத்தினர்.

அவரது இறுதி ஊர்வலம் இன்று (3.11.23) மாலை 3 மணியளவில் 20/26, நாகப்பா நகர் இரண்டாவது தெரு, சி.பி. சாலை, பழைய வண்ணாரப்பேட்டையில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு, மூலக்கொத்தளம் இடுகாட்டை அடைந்து அங்கு இறுதிச் சடங்குகள் நடைபெறுகிறது.

ஒட்டுமொத்த தமிழ்நாடே நிராகரிக்கும் நீட் என்னும் அநீதியை ஒழிக்க, அமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் முன்னெடுக்கும் மாபெரும் கையெழுத்து இயக்கம், அவர்களின் வழிகாட்டுதலுடன் எம்.ஜி. ஆர்.நகர் மார்க்கெட் பகுதியில் நீட் தேர்வுக்கு எதிரான தங்களின் எண்ணங்களை வெளிப்படுத்தும் வகையில் பொதுமக்களிடம் விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா கையெழுத்து பெற்றார். இந்நிகழ்வில் கழக வர்த்தகர் அணிச் செயலாளர் காசி முத்துமாணிக்கம், பகுதிக் கழகச் செயலாளர் கே.கண்ணன் எம்.சி, வட்டக் கழகச் செயலாளர்கள் பூக்கடை பழனிச்சாமி, இரா.செழியன், பி.கே.குமார், கதிரேசன், செந்தில்குமார், அன்பழகன் மற்றும் கழக நிர்வாகிகள், பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் பலர் கலந்து கொண்டனர்